௯௭

தண் டூண் இலக்கம்.

O-,1MYR,K
N45
172717

377

# கண்மணி ராஜம்

பாடல்கள்

377/2-4

18 JUN 1946

MADRAS

ஸ்ரீ யோகியார்

...பிரசுரம்

C-,1MYR,K
N45
172717

No 2

# MODERN LYRIC GEMS

FIRST EDITION—JUNE 1946

★

COPYRIGHT

★

**Price 4 Annas**

★

STAR PUBLICATIONS

PALAKARAI — TRICHINOPOLY

PRINTED AT THE CITY PRESS, TRICHINOPOLY
FOR STAR PUBLICATIONS - P. I. C. TY. 9 COPIES-2000

# கண்மணி ராஜம்

பாடல்கள்

28 JUN 1946

ஸ்ரீ யோகியார்

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை :-: திருச்சி

## 'தேவி'யின் கவிக்கனிகள்

விலை 3 அணு

★

## ரஸிகமணி டி. கே. சி

பாஸ்கரத் தொண்டைமான்

விலை ரூ. 2/-

★

## புயல்—*சிறந்த நாவல்*

ரகுநாதன்

விலை ரூ. 2/8

172717

## 1. கண்மணி ராஜம்

சின்னஞ் சிறுகுழந்தை
　　சிங்காரப் பெண்சிறுமி
என்னெஞ்சு அமுதூற்றும்
　　இனிமை எங்குபோனதுவோ?

பூப்போலக் கண்கள்,
　　பூப்போலப் புன்சிரிப்பு,
பூப்போலக் கைவிரல்கள்,
　　பூப்போலப் பாதங்கள்,

பூப்போலக் கன்னம்,
　　புதுமின்போல் வளையும்உடல்,
பார்ப்போர் செவிக்குத்தேன்
　　பாய்ச்சும் குதலைமொழி,

மாம்பழத் தின்மேனி,
மதிஉறிஞ்சும் வட்டமுகம்,
பூம்பருத்தி ஆடை
புனையாத தோகைமயில்,

ஆசைஎலாம் ஓர்உருவாய்,
ஆர்வம்எலாம் ஓர்கனியாய்,
பேசரிய காதல்
பிழம்போர் மதுக்கடலாய்,

சோதி உயிர்பாய்ந்து
துள்ளும் சிறியஉடல்
மோதும் இன்பமாய்வளர்ந்த
மோகச் சிறுகுழந்தை.

காளியம்மை எம்மேல்
கருணைகொண்டு சின்னாட்கள்
தோளில்விளை யாடவிட்ட
சுவைஊறும் பொன்பாவை.

வானத்து ஒருசுடர்தான்
வையத்தைப் பார்ப்பதற்கு
மீனத் திரள்வடித்த
மின்அரசி போல்வந்தாள்.

வேலைதரும் தெள்ளமுதம்
வெறுப்பாக்கும் எம்காதல்
வேலைதரும் தெள்அமுதாய்
விளைந்ததொரு தேன்கும்பம்.

பம்புமலைக் காட்டில்
பாயாமல் என்மனைவி
கும்பமுலைக் காட்டில்
குதித்திட்ட மான்குட்டி.

தெள்ளத் தெளிக்கும்
திரைமுத்தம் அல்லஎங்கள்
உள்ளக் கடலூறும்
உவகைத்தேன் முத்தாரம்.

மண்ணிட்டு மூடியதால்
மக்கிட்டுப் போகாமல்
எண்ணிட்ட நெஞ்சத்து
எழிலிட்ட வைரமணி.

வானத்து மேகத்
திரையூடு வாராதுளம்
மோனத்துக் காதல்
முகிலூடு வந்தமதி.

காட்டுமரப் பொந்துக்
கருங்குயிலி அல்லஎங்கள்
பாட்டுநெஞ்சப் பொந்தில்
பாட்டிசைத்த பொன்குயிலி.

கள்அவிழும் கமலத்துக்
கருவண்டு அல்லாமல்எங்கள்
உள்ளக் கமலத்தே
ஒளித்திருந்த பொன்வண்டு.

பேரழகும் பேரறிவும்
பேரருளும் மணம்வீசி
ஆர விரிவதற்காய்
அமைந்ததொரு மல்லிமொட்டு.

தேடக் கிடைக்காத
திரட்டுப்பால், தேவர்க்கும்
கூடக் கிடைக்காத
கூத்திட்ட பூச்செண்டு.

கண்ணோடு பாவைக்
கருத்தோடும் ஆசைஎல்லாம்
பண்ணோடு வந்ததொரு
பச்சைப் பசுங்கிள்ளை

தேசம் எல்லாம் சுற்றும்
சிறுபறவை சின்னேரம்
வீசும் கிளை ஒன்றில்
வீற்றிருந்து போவதுபோல்,

கனவினிலே கண்ட
கனகம்போல், கள் உண்டோன்
நினைவினிலே தோன்றும்
நிச்சயம்போல், தோட்டத்தில்

காலையிலே கண்விழித்துக்
கடும்புயலில் அகப்பட்டு
மாலையிலே வாடி
வதங்கியதோர் மலரைப்போல்,

ஆண்டு இரண்டுகூட
நிறையாத ஆயுளுடன்
மாண்டுவிட்டாள் என்னுடைய
மன் உயிராம் பெண்பாவை.

கண்கொடுத்துக் கண்பிடுங்கக்
கடவுளுக்குக் கண்ணிலையோ?
பெண்கொடுத்துப் பெண்பிடுங்கப்
பிழைஎன்ன செய்தேனே?

நாளிருக்க, நானிலத்தில்
நடுங்கித் தளர்வெய்திக்
கூனல் கிழவர்களும்
கிழவியரும் கூடிநிற்க,

அசட்டு விழியுடையார்
ஆபாசப் பேயுடலார்,
கசட்டுநெஞ்சப் போக்கிலிகள்
கணக்கற்ருேர் தாமிருக்க,

சின்னஞ் சிறுவயதுச்
சிறுபாவை என்மகளைக்
கல்நெஞ்சக் காலன்
களவுகொண்டான், ஐயையோ!

ஆழ விழியின்
அலையெறியும் பார்வைதனைப்
பிழை யுடைய
பிணநோக்கால்ச் செய்துவிட்டான்!

கண்ணுள் மணியே
    கற்பகமே! கனிப்பிஞ்சே!
எண்ணத்து இனித்த
    எழில்மதுவே! போயினையே!

இவ்வளவு பேரழகை
    இப்பூமி தாளாதென்று
அவ்வளவும் தேவர்
    அடைந்தனரோ? யாதறிவோம்?

ராஜேச்வரி என நான்
    நாமமிட்ட தைக்கண்டு
ராஜேச்வரி உனைத்தன்
    நாட்டிற்கு அழைத்தனளோ?

பேரத்தி வேண்டுமெனப்
பிதிர்ப்பாட்டன் கூவினனே?
ஆரத்தி யிட்டுன்னை
அமரர்களும் ஏற்றனரோ?

நீயாகச் சென்றனையோ?
நினைத்தேவர் கூவினரோ?
பேயான போர்எமன்
பிணித்தழைத்துப் போனனே?

யாதும் அறியோம்
ஆனாலும் எம்முடைய
காதல்மேல் ஆணை
கவினிழந்து வாடுகின்றோம்!

எங்களையும் அவ்விடத்துக்கு
ஏன்கூட்டிப் போகவில்லை?
இங்கிவ்உலக மெலாம்
இருளாகப் போச்சுதடி!

கோடிகோடி யாப்பொன்
கொடுத்தாலும் உன்னுடைய
மோடிச் சிறுகுறும்பு
மோகம் கிடைத்திடுமோ?

புருவத்தில் பொட்டிட்டுப்
புதுவிழிக்கு மையெழுதி,
கருவம் அடைந்ததெல்லாம்
கண்மூடிப் போச்சுதடி!

உச்சிவழித்து உன்கன்ன
உப்பலுக்குச் சாந்துவைத்து
மெச்சிப் புகழ்ந்ததெல்லாம்
வீணுகப் போச்சுதடி !

புத்தம் புதியஉயிர்
போந்து உந்தன் கண்களிலே
தத்திவிளை யாடியதைத்
தான்மறத்தல் சாத்தியமோ?

அன்றலர்ந்த செந்தாமரைத்
திகழ்ச்சி ஆர்ந்தமுகம்
இன்றலர்ந்த என்நெஞ்சத்தில்
இன்பம் பொழியாதோ?

தொட்டில் உதைத்துத்
துள்ளுவதும், நின்மலர்க்கால்
கட்டைவிரல் சுவைத்துக்
களிப்பதுவும் காண்போமோ?

தேனிட்டுக் குதப்பித்
தெள்ளமுதம் வாய்விட்டுக்
கூவிட்ட வீணைக்
குதலை இனிக் கேட்போமோ?

காப்பிட்டோம் கையில்,
கடகமிட்டோம் காலுக்கு,
பூப்பட்டு உடல்படுக்கப்
புனைபட்டு மெத்தையிட்டோம்.

கூப்பிட்ட போதெல்லாம்
குறுகித் தவழ்ந்திடுவாய்,
கூப்பிட்டோம்: உந்தன்
குளிர்ந்தமுகம் காட்டாயோ?

'அப்பன் இவன் ஏழை,
அரைக்காசுக் கஞ்சியில்லை,
இப்பரிசு வேண்டாம்!'
எனத்துறந்து போயினையோ?

ஆசையெலாம் திரட்டி
ஆருயிரை வார்த்தாற்போல்
நேசமொடு பெற்றாள்
நினைமறந்து போவாளோ?

'ராரா ராமைய'வென
ரமணீயக் கைவிரித்துத்
தாரா தாராவென நீ
சாற்றுவதும் கேட்போமோ?

'அப்பா! அப்பா!'என்றும்,
'அம்மா! அம்மா!' என்றும்,
இப்பாரில் எம்மைஇனி
யாரழைக்கப் போகின்ருர்?

பட்டிட்டுப் பொட்டிட்டுப்
பள்ளிக்கு உனைஅனுப்பத்
திட்டமிட்ட தெல்லாம்
திசைமாறிப் போச்சுதடீ.

காட்டா தனவெல்லாம்
காட்டிஎம்மைப் பிரிந்தாய்
மீட்டும் எங்கள்வீட்டினிலே
விளையாட வாராயோ ?

## II. காசில்லாக் கனகரத்னம்

வெய்யில் படபடக்கும்
வெப்பம் கொழுந்துவிடும்,
நெய்யில் நெருப்புருக்கும்
தார்போட்ட நெடுவீதி,

இருபுறமும் மச்சுமச்சாய்க்
கட்டிடங்கள் எத்தனையோ,
ஒருமனிதன் தங்குதற்கோர்
ஒதுக்குப் புறமில்லை,

காரோடும், ட்ராமோடும்,
    கானல் அலையோடும்,
நீரோடும் பைப்பில்லை
    நிழலோடாச் சென்னையிலே.

2

என்றைக்கோ நன்றாய்
    இருந்தாலும்; ஆனாலும்
இன்றைக்கோ இவனைப்போல்
    இடுக்குடையார் யாருமில்லை.

கையில் குடையுமில்லை,
    காலுக்குச் செருப்பில்லை,
பையில் பணமில்லை,
    பசிக்குப் பருக்கையில்லை.

மேலோடும் வேர்வையினில்
　　மிதந்தோடும் மேல்சட்டை,
காலா வதியான
　　கந்தலிலே பஞ்சகச்சம்,

பஞ்சடைந்து பாசடைந்த
　　பாழ்ங்கிணறுபோல் குழிக்கண்;
புஞ்சிரிப்புக் காணுத
　　பொக்கைவாய், புழைக்கன்னம்,

கீற்றுவிட்ட நெற்றி,
　　கிறுக்கிவிட்ட கோணல்முகம்,
நால்திசைக்கும் பொடிநாற்றம்
　　நாறுபுனல் மூக்கோட்டை,

தோலிருக்கச் சுளை முழுங்கும்
சூரன்போல் வறுமைப்பேய்த்
தோலிருத்தித் தசைமுழுங்கச்
சுக்காகிப் போனஉடல்,

முட்டியிடும் கால்கள்,
முறுக்கிவிடும் முட்டியெலாம்,
பட்டினியாய் பாழ்வயிறு
பாதாளம் பார்த்துவரும்.

3

வீட்டில் மனைவிகர்ப்பம்,
விளையாட்டுக் கைக்குழந்தை
நீட்டிப் படுத்துவிட்டான்,
நெஞ்சுக்குள் ஆபத்தாம்,

மொட்டச்சி மார்நால்வர்,
    மூளிப்பெண் மூவருக்குக்
கட்டத் துணியில்லை,
    கண்ணாலம் காத்திருப்பார்,

மூத்தபெண் வீட்டோடே,
    மோகனத்துக்கு அவள்கணவன்
வார்த்தைக்குத் தக்கபடி
    வரிசையெடுக் காமையினால்,

அன்றாடம் நாலுபணம்
    அகப்பட்டால் சோறுண்டு,
என்றாகிலும் கிடைக்கும்
    இலைபோட்ட சாப்பாடு,

பாவிமகன் பிள்ளைகட்குப்
பாடம்சொல்லி வாரானும்,
மூவிரண்டு ரூபாய்க்கு
மோசமில்லை மாசத்தில்!

என்செய்வான் ஏழை!
இருகாலும் தள்ளாடப்
பன்முறை ஆபீஸ்கள்
பலபலவும் போய்வந்தான்,

இரவல்பேப்பரில் 'தேவை'
என்னென்னவோ கண்டான்,
இரவல்காகிதம் வாங்கி
எவ்வளவோ விண்ணப்பம்

எழுதினன்: என்றாலும்,
எழுதியதுதான் மிச்சம்
தொழுதான், பல்லிளித்தான்,
தோத்தரித்தான், பணக்காரர்

நெஞ்சம் இளகவில்லை
'நீட்டுகம்பி !' என்றுரைத்தார்
'பஞ்சை இவன் பூமிக்குப்
பாரம்'எனச் சொல்லிவிட்டார்.

காலியில்லை வேலை,
காலியிருந்தால் லஞ்சக்
கூலிக்குக் காசில்லை,
கொடுக்கச் சிநேகரில்லை,

O-,1 MYR,IC N45
172217

பகல்பகதூர் ராப்பகதூர்
பட்சமிவன் பாலில்லே,
அகலஉலகத்து இவனே
ஆதரிப்பார் யாருமில்லே.

பேர்பெத்தப் பேர்தான்,
கனகரத்னப் பெரும்பேராம்
ஊர்சுற்றும் நாய்க்கேனும்
எச்சில் உணவுண்டு,

பஞ்சைப்பார்ப்பான் ஏழைப்
பரதேசிக்கு அதுவுமில்லே.
நெஞ்சம் கொதிப்பேற,
நினேவெல்லாம் தற்கொலேயின்

மீதேறச் சென்னைநகர்
வீதியெல்லாம் சுற்றுகிறான்.
காசினிக்குக் கருணையில்லை,
கடவுளுக்குக் கண்ணில்லை,
சீசீ! சமூகத்தின்
சிறுமைகளுக்கு எல்லையில்லை!

## III. கவிதை ஊற்று

### 1

சொல்லினாலேகவி சொல்லவந்தேன்,
சொல்லில்அமுதினை மெல்லவைத்தாள்;
கொல்லும்அமிழ்தினில் கூறவந்தேன்,
கோடிக்கவிதைகள் ஊறவைத்தாள்.

மண்ணில் இன்பங்களைப் பாடவந்தேன்,
வானின் இன்பங்கள் கொண்டாட
வைத்தாள்;
விண்ணின் இன்பங்கள் இசைக்க வந்தேன்,
வேதமுடிவை அசைக்கவைத்தாள்.
காசுக்கும்சோற்றுக்கும் பண் இசைப்பேன்,
காதல்அமுதத்தின் விண் அசைத்தாள்;
நீசக்குணமுடை எந்தனுள்ளே அவள்
நீடித்திருப்பதற்கு ஆசைகொண்டாள்.

## IV. பட்டுப் பூச்சி

### கேள்வி

மின்னல்வரிப் பொன்தகட்டில்
மேவுபல வண்ண
வெட்டுமணிப் பட்டுடையின்
விசிறியின்மேல் மிதந்தே,

புன்னகைசெய் பூங்காவின்
வளையவரும் பொன்னே!
புகழ்மதுஉண்டு அகமகிழ்ந்த
புதுச்சோதிப் பாவாய்!

சின்னஞ்சிறு முடைப்புழுவாய்
முசுட்டையிலை கறித்த
சிறுபோதின் ஆசைஎல்லாம்
செப்பிடுவாய் எனக்கே!

என்னென்ன கனவுகண்டாய்?
ஏதேது நினைத்தாய்?
இவ்உடையின் செவ்விஎலாம்
எவ்வண்ணம் பெற்றாய்?

## 2

பழுத்தசுவர் முட்டையுள்ளே
கண்வளர்ந்த போது,
பாரகமும் விண்ணகமும்
மறைந்த இருள்நேரம்

செழித்த பட்டுப்பஞ்சணையில்
சிறையிருந்த வேளை,
சிந்தையுற்ற கனவை எலாம்
எந்தனுக்கிங்கு உரைப்பாய்!

விழித்தமலர் கொழித்தழகு
வெளிப்படற்கு முன்பே
விஞ்சைஎன்ன செய்துஇந்த
மிஞ்சும் எழில்பெற்றாய்?

கழித்தஉடைக்குள் இந்தக்
கவின்உடையை ஈசன்
கட்டி வைத்தான் போலும்சிறு
பெட்டியிலே முன்னல்!

## பதில்

காம்பின்றித் தன்னிலேதான்
கவின் விரியும்மலர்போல்,
களிப்பற்றபச்சை உடைக்
கருக்கிட்டு முட்டை

பாம்புரிக்கும் சட்டைஎனப்
புறத்தழகை நீக்கி,
பரமரகசிய மகத்துப்
பான்மையெலாம் விரித்தேன்!

கூம்பும்இருள் சுடராச்சுக்
குற்றுயிரில் இன்பம்
குதித்ததுருள் சூரியனின்
கொதிக்கும் அழல்தேனைத்

தேம்பொதிந்த வண்ணமலர்
கிண்ணிஎலாம் சேர்த்துத்
தேசுடன்தம் வாசல்திறந்து
ஆசைவளர்த் திற்றே!

4

வானொளியும் மண்ணொளியும்
மலர்ஒளியும் மந்த
மாருதத்தின் இன்னிசையும்
ஆரமுதச் சந்தக்

கானகத்துப் புள்ளினங்கள்
கவின் நிறைந்த பாட்டும்,
காலம்எலாம் பெற்றுவக்கும்
சிலம்பொலி பெற்றேன் :

கூனுடலும் குழிந்தவிழிக்
குறுகுநெஞ்ச மனிசக்
குரங்கருக்குச் சொல்லுகின்றேன் ;
வரம்கொடுப்பாள் அன்னை !

ஊனுடையும், உள்ளமெனும்
ஓய்வில்லாக் களரும்,
உலகமெலாம் மறந்திடுவீர் ;
ஓங்கும் உயிர்ப்பேறு !

5

வெளிப்பகைகள் வெட்டிவிட்டால்
உள் அமுதம் விளங்கும் ;
விச்சை எலாம் வரும்பழைய
இச்சை எலாம் போக்கில் ;

களிப்புடைய ஜீவன் எழில்
காணவெனில், தேகக்
கந்தல்விட்டு நெஞ்சம் எனும்
கருக்கிட்டு முட்டை

ஒளித்துணர்வை உயிரொடுக்கி
உன்மத்தம் கொண்டால்,
ஓங்கு தவத்தால் ஆன்மப்
பாங்கு வளர்ந்தாடும் ;

துளித்தனையும் புறமில்லாத்
　　துக்கத்து ஆழ்ந்திடுவீர்;
தூயபெரும் ஜோதிஉமை
　　மாயநடம் பார்ப்பீர்!

6

அகப்புறமும் புறப்புறமும்
　　அகம்புறமும், யாவும்
அகமாக அகத்தகமாய்
　　அகத்தகத்துக்கு அகமாய்,

புகப்புகஓர் ஞானவெள்ளம்
　　பொங்கி வழிந்துஓடும்;
புன்மைஎலாம் நன்மைசெய்யும்
　　போதநதி ஊடு,

ஜகத்தழகு நும்அழகாய்,
ஜகத்துயிர் நும்உயிராய்,
ஜகத்தலைவன் நீராவீர்!
தேவர் எலாம் புகழச்

சிகப்புடைய கருமேனித்
தேவிஅவள் உம்மைத்
தெய்வீகப் பெரெழிலில்
மெய்யேக வைப்பாள்.

I MYR, K
N95



172717

விரைவில் வெளிவரும்

**கம்பன் யார்?** — டி. கே. சி

(2ND. EDITION)

★

**இளவேனில்** — கவிதைகள்

'சோமு'

★

**"கல்லறை மோகினி"** —

நிகரற்ற சிறு கதைகள்

'சோமு'

29-7-63-L

# "மாக்ஸிம் கார்க்கி வரலாறு"

அ. சிங்காரவேலு

★

# ஞானி எமர்சன் சிந்தனைகள்

வி. ஆர். எம்

20A.
15-29